**எஸ்.டி.சி.எண்.49/2021** **தேதி - 16.12.2022**

<u>ம.சா.1 ஆன Mr.Paramasivam என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.</u>

எதன் அடிப்படையில் நான் இவ்வழக்கில் எனது மனைவிக்காக ஆஜர் ஆகிறேன் என்றால் எனது மனைவிக்கு உடல் நிலை சரியில்லாததால் அவருக்காக நான் இவ்வழக்கை நடத்தி வருகிறேன். நான் ம.த.சா.ஆ.8ன் அடிப்படையில் இவ்வழக்கை நடத்துகிறேன். நான் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ.8ல் குறிப்பாக நான் சாட்சியம் சொல்வதற்கு ம.த.சா.ஆ.8ன் படி அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி வருமான வரி ஏதும் செலுத்தவில்லை. எனது வீட்டினை கட்டுவதற்காக எவ்வளவு Joint venture போட்டுள்ளேன் என்றால் இரண்டு முறை போட்டுள்ளேன். ஏற்கனவே Sree Sai Foundation உடன் Joint venture செய்திருந்தேன். ஆனால் கூறியபடி அவர்கள் வீட்டினை கட்டி கொடுக்க முடியாது என்று கூறியதன் பிறகு, அவர்களே வினிசா பவுண்டேசனை அறிமுகப்படுத்தி அந்த நிறுவனத்துடன் Joint venture செய்து கொள்ளுமாறு உறுதியளித்ததின் அடிப்படையில் நான் பிறகு வினிசா பவுண்டேசன் உடன் Joint venture ஏற்படுத்திக் கொண்டேன். மேற்குறிப்பிட்ட சங்கதியை விளக்கும் வகையில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாய் பவுண்டேசனுடன் Joint venture ஐ ரத்து செய்த அன்றே வினிசா பவுண்டேசனுடன் Joint venture செய்து கொண்டேன். எதிரி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட Joint venture ல் எனது மனைவி கையொப்பம் செய்துள்ளார். Joint venture ஏற்படுத்திக் கொண்ட தினம் தற்போது ஞாபகமில்லை. வினிசா பவுண்டேசன் உடன் Joint venture எதுவும் நாங்கள்

ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. வினிசா பவுண்டேசனுடன் ஏற்படுத்திக் கொண்ட Joint venture ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வினிசா பவுண்டேசனுடன் ஏற்படுத்திக் கொண்ட Joint venture என்வசம் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்யவும் தயாராக உள்ளேன்.

எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- (Tmt.A.Theviya),
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

//True Copy//
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.